# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1643/43 - 2010 මාර්තු 05 වැනි සිකුරාදා - 2010.03.05

*1643/43 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**வடமேல் மாகாண மாகாண சபை**

*வடமேல் மாகாண மாகாண சபையின் 2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க கூட்டுறவுத்துறை ஊழியர் ஓய்வூதியத் திட்ட நியதிச் சட்டம்*

*வடமேல் மாகாண மாகாண சபையின் 2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க கூட்டுறவுத்துறை ஊழியர் ஓய்வூதியத் திட்ட நியதிச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்டு, 2009.05.14 ஆந் திகதியிடப்பட்ட 1601/24 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள கட்டளைகள், சொல்லப்பட்ட நியதிச் சட்டத்தின் 24 (III) ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின்படி வடமேல் மாகாணத்தின் மாகாண சபையின் அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிக்கப்பட்டதுடன், இந்த மாகாண சபையினால் 2009.11.03 ஆந் திகதி பின்வரும் திருத்தங்களுடன் அங்கீகரிக்கப்பட்டுள்ளதெனவும், குறித்த திருத்தங்கள் வடமேல் மாகாண மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்ட 2009.11.03 ஆந் திகதியன்றிலிருந்து செயல்வலுவுக்கு வருமெனவும் சகலரும் அறிந்து கொள்ளும் பொருட்டு இத்தால் பிரசுரிக்கின்றேன்.*

*அத்துல சரத் குமார விஜேசிங்ஹ,*
*முதலமைச்சரும் நிதி, திட்டமிடல், சட்டமும் ஒழுங்கும், உள்ளூராட்சி மற்றும்*
*மாகாண நிர்வாகம், ஆள்வலு, கல்வி, கலாசார அலுவல்கள்,*
*காணி, போக்குவரத்து, சுற்றாடல், சுற்றுலாத்துறை, முதலீட்டு ஒருங்கிணைப்பு,*
*கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, உணவு வழங்கல் மற்றும் விநியோகம் பற்றிய அமைச்சரும்,*
*வடமேல் மாகாண மாகாண சபை.*

*குருநாகல்,*
*2010, பெப்புருவரி 19.*

**கட்டளைகள்**

*கட்டளைகளின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

*1. கட்டளைகளின் 3 ஆம் பிரிவு பின்வருமாறு திருத்தப்படுகின்றது.*

*(அ) கட்டளைகளின் 3. II. ஆம் பிரிவை நீக்கி அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவை பதிலீடு செய்வதன் மூலமும்,*

*"3. II. 2008.07.28 ஆந் திகதியிலிருந்து 2009.09.30 ஆந் திகதிவரை சேவையில் இணைந்த ஊழியர்கள், பணிப்பாளரினால் உபயோகப்படுத்துவதற்காக விதித்துரைக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தை பூர்த்தி செய்து குறித்த நோக்கத்துக்காக அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தருக்கு பணிப்பாளரினால் குறித்துரைக்கப்படுகின்ற காலப்பகுதியினுள் சமர்ப்பித்தல் வேண்டும்."*

(ஆ) கட்டளைகளின் 3. III. ஆம் பிரிவை நீக்கி அதற்குப் பதிலாக பின்வரும் உப பிரிவை பதிலீடு செய்வதன் மூலமும்,

"3. III .2009.10.01 ஆந் திகதியிலிருந்து சேவையில் இணைந்து கொள்கின்ற ஊழியர் ஒருவர் சேவையில் தாம் இணைந்து கொண்ட திகதியிலிருந்து 90 நாட்களுக்குள் பணிப்பாளரினால் உபயோகப்படுத்துவதற்காக விதித்துரைக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தை பூர்த்தி செய்து குறித்த நோக்கத்துக்காக பணிப்பாளரினால் அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்."

(இ) 3. III. ஆம் பிரிவினை உடனடுத்து பின்வரும் பிரிவைச் சேர்ப்பதன் மூலமும்,

"3. IV. இந்த கட்டளைகளின் 2.II. ஆம் பிரிவின் கீழ் உள்வாங்கப்பட்ட ஊழியர்கள் கூட்டுறவுத்துறை ஊழியர் ஆணைக்குழுவிடமிருந்து இயைபுள்ள அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டு, இந்தக் கட்டளை செயற்படுத்தப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள் குறித்த நோக்கத்துக்காக அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரிக்கு உரிய விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்."

*கட்டளைகளின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

2. கட்டளைகளின் 4 ஆம் பிரிவு பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

(அ) 4. IV. ஆம் பிரிவினை உடனடுத்து பின்வரும் பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலமும்,

"4. V. அத்தகைய ஏதேனும் விண்ணப்பமொன்று நிராகரிக்கப்படுவது சம்பந்தமாக அல்லது பணிப்பாளரினால் வழங்கப்படுகின்ற ஏதேனும் தீர்பொன்று தொடர்பில் திருப்தியுறாத எவரேனும் அங்கத்தவர் ஒருவர் நியதிச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள மேன்முறையீட்டுச் சபைக்கு, சொல்லப்பட்ட 18 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மேன்முறையீடொன்றைச் சமர்ப்பிக்கலாம்."

"4. VI. நியதிச் சட்டத்தின் 18 ஆம் பிரிவிற்கமைய நியமிக்கப்படுகின்ற மேன்முறையீட்டுச் சபைக்கு அமைச்சரினால் தீர்மானிக்கப்படுகின்ற ஊதியமொன்று செலுத்தப்படலாம்."

*கட்டளைகளின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

3. கட்டளைகளின் 8 ஆம் பிரிவு பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

(அ) 8 ஆம் பிரிவுக்குப் பின்னர் "சம்பளமற்ற லீவு பெற்றிருக்கும் சந்தர்ப்பத்தில்" என்னும் பக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளையை 8.1 என இலக்கமிடுவதன் மூலமும்,

(ஆ) அதனை உடனடுத்து பின்வரும் பிரிவுகளை உள்ளடக்குவதன் மூலமும்.

"8. II. கட்டளைகள் செயல்வலுவுக்கு வந்த சந்தர்ப்பத்திலிருந்து 2009.09.30 ஆந் திகதி வரை வெளிநாட்டுக்குச் சென்ற ஊழியர்கள், அவர்கள் மீண்டும் நாட்டுக்குத் திரும்பிய திகதியிலிருந்து 60 நாட்களுக்குள் விண்ணப்பத்தினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

8. III. எவரேனும் ஊழியர் ஒருவர் ஏதேனும் காரணமொன்றின் மீது சம்பளமற்ற லீவு பெற்றிருக்கும் சந்தர்ப்பத்தில் அவரது அங்கத்துவத் தொகையை அறவிடுதலானது அந்தக் காலப்பகுதிக்கு உரியதாக செய்யப்படக்கூடாதென்பதோடு, குறிப்பிட்ட சம்பளமற்ற சேவைக் காலத்தை ஓய்வூதியக் கணிப்பின் போதும் கணக்கிலெடுக்கப்படாதிருத்தல் வேண்டும்."

*கட்டளைகளின் 16 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

4. கட்டளைகளின் 16 ஆம் பிரிவு பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(அ) 16 ஆம் பிரிவினை உடனடுத்து பின்வரும் பிரிவைச் சேர்ப்பதன் மூலமும்

"16. 1.நிலுவைச் சம்பளமின்றி அங்கத்தவர் ஒருவர் மீளப் பணிக்கமர்த்தப்பட்டால் அந்த சம்பளமற்ற காலப்பகுதியானது ஓய்வூதியக் கணிப்பின் போது கணக்கில் எடுக்கப்படாதிருத்தல் வேண்டுமென்பதோடு, இந்தக் காலப்பகுதியின் சார்பில் அங்கத்துவப் பணமும் அறிவிடப்படாதிருத்தல் வேண்டும்."

3-737

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.